Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com
Websites
Bahasa: www.pengguna.org.my
English: www.consumer.org.my
Chinese: www.cap.org.my

பத்திரிகை செய்தி 10-04-2020

# நாட்டை காக்கும் ராணுவ வீரர்கள் மீது சிறு நீர் வீசுவதா. அடாவடித்தனம்.

கோலாலும்பூரிலுள்ள மூன்று அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளை சேர்ந்த குடியிருப்பாலர்கள், தங்களின் பாதுகாப்பிற்கு உதவ வந்த மலேசிய ராணுவத்தினர் மீது நெகிழியில் சிறு நீர் கட்டி, அதனை மேல் மாடியிலிருந்து ராணுவ வீரர்களின் தலையில் வீசி இருப்பது, மிகப்பெரிய அடாவடித்தனம் என பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் கல்வி அதிகாரி என் வி சுப்பாராவ் கூறினார்.

இந்த செயலை மேற்கொள்ளும் வெளிநாட்டவர் மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என் அவர் வேண்டுகோள் விடுத்தார். ராணுவ வீரர்கள், நம்மையும் நம் நாட்டையும் காக்கும் மிகப்பெரிய மதிக்கத்தக்கவர்கள். ஆனால், அவர்களை மதிக்காமல், அவர்களின் தலையில் சிறு நீரை அதுவும் நெகிழியில் கட்டி மேலே இருந்து வீசுகின்றனர்.

என்ன தைரியம் இவர்களுக்கு. இங்கே பிழைக்க வந்தவர்கள், நமது ராணுவத்தினரை இழிவு படுத்தும் செயல் தொடரக்கூடாது. இந்த அனகாரிகமான செயலை புரிந்தவர்களை கண்டு பிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுப்பாராவ் கேட்டுக் கொண்டார்.

என் வி சுப்பாராவ்.
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்